## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புநர்
கோ. தங்கப்பாண்டி,
நகராட்சி பொறியாளர் (ம)ஆணையாளர்(பொ),
தென்காசி 627 811

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம்
சென்னை 5

ந.க.எண் சி1/2872 /2016

நாள் : 01–08–2016

ஐயா,

பொருள்: நிர்வாக அறிக்கை – தென்காசி நகராட்சி – 2015–16–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை சமர்ப்பித்தல் – சம்பந்தமாக

பார்வை: நகர்மன்றத் தீர்மானம் எண்: 894 நாள். 13–07–2016

‘’’’

தென்காசி நகராட்சியின் 2015–16–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு நகர்மன்றத் தீர்மான நகலுடன் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆணையாளர்
தென்காசி நகராட்சி

இணைப்பு – 1. நிர்வாக அறிக்கை
2. நகர்மன்ற தீர்மான நகல்

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
1. மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி–9
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி–2

நகல்
துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருநெல்வேலி–2
உதவி இயக்குநர், புள்ளியியல் துறை, திருநெல்வேலி

**<u>தென்காசி நகர்மன்றத்தின் 13/07/2016ம் தேதிய தீர்மானம் எண். 894 ன் உண்மை நகல்</u>**

தென்காசி நகராட்சியின் **2015–2016**ம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண். சி1/2872/2016

**<u>நகர்மன்ற தீர்மான எண்:</u> 894** **நாள். 13/07/2016**

**பதிவு செய்யப்பட்டது.**

**(ஒம்) எஸ்.பானு,**
**நகர்மன்ற தலைவர்**

**/ உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**தென்காசி நகராட்சி**

# தென்காசி நகராட்சி

## 2015–2016–ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

### 1. நிறுவனமும் மேற்பார்வையும்

தென்காசி நகராட்சி, தென்காசி புலியூர் ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களைக் கொண்டதாகும். இந்நகராட்சி 27.01.1965ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 196ம் எண். அரசாணையின்படி 01.04.1965 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக முதன்முதலாக அமைக்கப்பட்டது. பின்னர் 16.10.1977ம் தேதிய அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் ஆணை எண். 665.ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 22.05.1998ம் தேதிய ஆணை எண் 85ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது.

இந்நகராட்சியின் பரப்பளவு 26.1588 சதுர கிலோமீட்டராகும். 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்குப்படி மக்கள் தொகை 70530. இதில் ஆண்கள் 34890 பெண்கள் 35616 மற்றவர் 24 ஆகும்.

### 2. மன்றம்

2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் அரசு ஆணை எண். 135 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.06.1996ன்படி இந்நகர் பகுதி 33 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு , நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

| | |
|---|---|
| 1. பொதுவார்டு | 20 |
| 2. பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது | 9(வார்டு எண். 2, 4, 12, 17, 21,23,29,31,33) |
| 3. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (பெண்கள்) | 2 (வார்டு எண். 10, 27) |
| 4. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (ஆண்கள்) | 2 (வார்டு எண். 3, 20) |
| மொத்தம் | 33 வார்டுகள் |

அக்டோபர் 2011–ல் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் தேர்தல் நடைபெற்று நகர்மன்ற தலைவராக திரு. **திருமதி. ச. பானு,** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். நகர்மன்ற துணைத்தலைவராக 7–வது வார்டு உறுப்பினர் **திரு.வே.சுடலை** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். மற்ற நகர்மன்ற உறுப்பினர்களில் கீழ்க்கண்டவர்கள் நிலையான குழுவிற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

1. நியமனக் குழு — திருமதி. எஸ்.அரசம்மாள்,
2. ஒப்பந்தக் குழு — திரு ஆர்.கோபால்
3. வரிமேல்முறையீட்டுக் குழு
   1. திருமதி. ரா. சபியாள் பீவி
   2. திருமதி. கே. சங்கீதா
   3. திரும.. எம். தமிழரசி
   4. திரு. எம். ராமதாஸ்

**3. <u>அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.</u>**

| | | |
|---|---|---|
| சாதாரணக் கூட்டம் | – | 3 |
| அவசரக் கூட்டம் | – | 4 |
| சிறப்புக் கூட்டம் | – | – |
| உள்ளூர்திட்டக் குழுக் கூட்டம் | – | – |
| ஒப்பந்தக் குழுக் கூட்டம் | – | – |
| வரிமேல் முறையீட்டுக்குழுக் கூட்டம் | – | – |
| நியமனக்குழுக் கூட்டம் | – | 1 |

**4. <u>ஆணையாளர்:</u>**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவிபரப்படி ஆணையாளர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | க. செந்திவேல், ஆணையாளர் | 01/04/2015 முதல் 29/02/2016 |
| 2 | கோ.தங்கப்பாண்டி, நகராட்சி பொறியாளர் (பொ) | 01/03/2016 முதல் 31/03/2016 |

**5. நகராட்சி பொறியாளர்**

| | | |
|---|---|---|
| 1 | வே. பிரின்ஸ்இராஜேந்திரன் விஜயகுமார் | 01/04/2015 முதல் 29/02/2016 |
| 2 | கோ.தங்கப்பாண்டி, நகராட்சி பொறியாளர் | 01/03/2016 முதல் 31/03/2016 |

**6. மேலாளர்**

| | | |
|---|---|---|
| 1 | இ. பட்டுச்சாமி, மேலாளர் | 01/04/2015 முதல் 29/05/2015 |
| 2 | செ.செந்தில்வேல்முருகன், கணக்கர் | 30/05/2015 முதல் 21/06/2016 |
| 3 | மொ.செ.அப்துல்கரீம், மேலாளர் | 22/06/2016 முதல் 31/03/2016 |

**7. வரி விதிப்பு**

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி சொத்து வரி விதிக்கப்படுகிறது,

1. பொது காரியங்கள் 3 சதவிகிதம்
2. பொதுசுகாதாம் 1 "
3. விளக்கு வரி 2 "
4. குடிநீர் (ம) வடிகால்வரி 6 "
5. கல்வி வரி 2.50 "
6. நூலகவரி 1. 20 "

---

மொத்தம் 15.70 சதவிகிதம்

---

**8. சாலைகள்**

அறிக்கை ஆண்டின் இறுதியில் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள சாலைகள் இந்நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகின்றது.

| | | கிலோ மீட்டர் |
|---|---|---|
| சிமெண்ட் கான்கிரீட் சாலை / சிமெண்ட் தளக்கறகள் | – | 43.550 |
| தார் சாலை | – | 47.689 |
| மெட்டல் சாலை | – | 10.971 |
| மண் சாலை | – | 4.700 |
| இதர வகைகள் | – | 0.000 |
| **மொத்தம்** | – | **106.910** |

**9. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2015–16**

ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 1 புதிய பேரூந்து நிலையம் முன்பு உயர்கோபுர மின்விளக்கு அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**10. சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2015–16**

ரூ8.10 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 9, மற்றும் ரூ8.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 10 ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை கட்டுதல் மற்றும் ரூ1.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 20 சிந்தாமணியில் மினி பவர்பம்ப் அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வார்டு எண் 27 ஆசாத் நகர் பகுதியில் ரூ3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

**11. திறந்த வெளியில் மலம் கழிக்கும் செயலினை ஒழிக்கும் திட்டம்**

ரூ3.70 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 23, ரூ2.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 1 TNHB காலணி மற்றும் ரூ3.10 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 3 உடையார் தெரு ஆகிய இடங்களில் உள்ள சுகாதார வளாகங்கள் பராமரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**12. சிறப்பு சாலை திட்டம் 2015–16**

ரூ512.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 சிப்பங்களாக கீழ்கண்டவாறு பணிகள் நடைபெற்றுவருகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | வார்டு எண்:1 TNCSC கிடங்கு செல்லும் சாலை, வார்டு எண்:2 மங்கம்மாள் சாலை, வார்டு எண்:3 களக்கோடித் தெரு வார்டு எண்:11 அரசூர் நங்கைம்மன் கோவில் தெரு மற்றும் செண்பக விநாயகர் கோவில் தெரு, வார்டு எண்:10 பாறையடி 2ம் தெருவில் (KTK மில் ரோடு) | 174.00 |
| 2 | வார்டு எண்:7 மலையான் தெரு மற்றும் செங்குந்தர் புதுத் தெரு, வார்டு எண்:8 மாதாங்கோவில் தெரு, வார்டு எண்:12 ஹரிஹரவிநாயகர் கோவில் தெரு, வார்டு எண்:17 நடுப்பேட்டை (பாவடி) தெரு மற்றும் வடக்கு கடையத் தெரு, வார்டு எண்:31 புதுமனை விஸ்தரிப்பு மற்றும் உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் சிமெண்ட் தளக்கற்கள் பதிக்கும் பணி | 158.00 |
| 3 | வார்டு எண்:21 அபிஷேகபுரம் தெரு (நகராட்சி அலுவலகம் பின்புறம் தெரு), வார்டு எண்:22 சங்கரநயினார் கோவில் தெரு மற்றும் சொக்கர் தெரு, வார்டு எண்:19 செய்யது குருக்கள் பள்ளி வாசல் தெரு, வார்டு எண்:23 சம்பா தெரு, வார்டு எண்:32 மைனாபேரி செல்லும் சாலை ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் சிமெண்ட் தளக்கற்கள் பதிக்கும் பணி | 180.00 |
| | **மொத்தம்** | **512.00** |

**13. தூய்மை இந்தியா திட்டம் 2015–16**

ரூ32.10 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு சமுதாய கழிப்பிட பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண் 28, சிதம்பரேஸ்வரர் கோவில் தெரு | 1.40 |
| 2 | வார்டு எண் 23, நகராட்சி அலுவலகம் | 2.20 |
| 3 | வார்டு எண் 11, அரசூர் நங்கையம்மன் கோவில் தெரு | 4.00 |
| 4 | வார்டு எண் 20, பெருமாள் கோவில் தெரு | 2.50 |
| 5 | வார்டு எண் 2, மங்கம்மாள் சாலை | 1.50 |
| 6 | வார்டு எண் 20, சிந்தாமணி பூங்கா | 1.50 |
| 7 | வார்டு எண் 1, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 1.50 |
| 8 | வார்டு எண் 8, மலையான் தெரு | 1.50 |
| 9 | வார்டு எண் 27, ஆயிரப்பேரி நவீன எரிவாயு தகனமேடை அருகில் | 2.50 |
| 10 | வார்டு எண் 27, ஆசாத் நகர் | 2.50 |
| 11 | வார்டு எண் 27, தென்காசி சாலை நீர்தேக்க வளாகம் | 1.50 |
| 12 | வார்டு எண் 1, மதுரை சாலை நீர்தேக்க வளாகம் | 1.50 |
| 13 | வார்டு எண் 32, மைனாப்பேரி சாலை | 2.50 |
| 14 | வார்டு எண் 32, கீழப்புலியூர் சமுதாய நலகூடம் அருகில் | 2.50 |
| 15 | ஆய்க்குடி சாலை நாய்கருதடை மையம் அருகில் | 1.50 |
| 16 | ஆய்க்குடி சாலை குடியிருப்பு | 1.50 |

மேற்கண்ட 16 பணிகளில் 13 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 பணிகள் நடைபெற்றுவருகிறது.

**14. தூய்மை இந்தியா திட்டம் 2015–16 (திடக் கழிவு மேலாண்மை)**

ரூ224.53 இலட்சம் மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டம் **2015–16** திடக் கழிவு மேலாண்மையின் கீழ் கீழ்கண்டவாறு பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தள்ளுவண்டிகள் 47 எண்ணம் வாங்குதல் | 11.28 |
| 2 | காம்பாக்டர் பின்ஸ் 24 எண்ணம் வாங்குதல் | 9.60 |
| 3 | காம்பாக்டர் ஒன்று வாங்குதல் | 34.00 |
| 4 | உரக்கிடங்கில் (போகநல்லூர்) நடைமேடை (Platform) அமைத்தல் (77.00 Sqmt) | 20.00 |
| 5 | மூன்றில் ஒரு பங்கு உரக்கிடங்கில் (போகநல்லூர்) ரூப் அமைத்தல் நடைமேடை (933.00 Sqmt) | 32.65 |
| 6 | உரக்கிடங்கிற்கு (போகநல்லூர்) தேவையான இயந்திரங்கள் வாக்குதல் | 110.00 |
| 7 | விழிப்புணர்வு ஏற்படுத்த (IEC) | 7.00 |
| | **மொத்தம்** | **224.53** |

**15. சுவர்ணஜெயந்தி திட்டம்**

2015-16 ம் ஆண்டு எவ்வித மானியமும் வழங்கப்படவில்லை.

**16. ஈமக்கிரியை**

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஈமக்கிரியை வகைக்கு 2015-16-ம் ஆண்டில் ரூ. வீதம் 100 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.25,000/—ம் செலவிடப்பட்டுள்ளது.

**17. தெருவிளக்குகள்**

தென்காசி நகராட்சி பகுதியில் 102.46 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | .. | 1708 |
| 2) சோடியம் ஆவி விளக்குகள்(70 வாட்ஸ்) | .. | 12 |
| 3) சோடியம் ஆவி விளக்குகுள் (150 வாட்ஸ்) | .. | 300 |
| 4) சோடியம் ஆவி விளக்குகள் (250 வாட்ஸ்) | .. | 222 |
| 5) 20 மீட்டர் உயர் கோபுர விளக்கு | .. | 7 |
| 6) T5 சேமிப்பு விளக்கு | ,, | 200 |
| 7) 250வாட் எம்.எச் விளக்குகள் | ,, | 92 |
| மொத்தம் | .. | 2541 |

தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி செப்டம்பர் 2002 முதல் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நகரில் 100 சதவீதம் தெருவிளக்குகள் எரியச் செய்யப்பட்டுள்ளது.

**18. புதிய விளக்குகள்**

நகராட்சி பொதுநிதியின் கீழ் 2015-16-ன் கீழ் 43 எண்கள் 1x40 வாட்ஸ் குழல் விளக்குகள் ரூ. 3.00 லட்சம் செலவில் புதிய தெருவிளக்கு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**19. ஆரம்பக் கல்வி நிலையங்கள்**

இந்நகராட்சியில் 1 நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் 3 நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் உள்ளன. உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**20.டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம்**

2013–14ம் ஆண்டில் டாக்டர் முததுலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித் திட்டத்தின் கீழ் 542 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.44,40,000 நிதிஉதவி வழங்கப்பட்டது.

**21. நூல் நிலையங்கள்**

இந்நகராட்சியில் ஒரு வாசகசாலை மட்டும் நடத்தப்பட்டு வந்தது. மேற்படி வாசகசாலை அரசாணை எண்.37 நாள். 03.04.2002 ந.நி.ம.கு.வ.துறையின் படி 15.05.2002ம் தேதி நூலக துறைக்கு தானமாக வழங்கப்பட்டு விட்டது. எனவே நூல் நிலையங்கள் எதுவும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

**22. பூங்காக்களும் தோட்டங்களும்**

இந்நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்டபடி நான்கு பூங்காக்கள் உள்ளன.

1. சிந்தாமணி பூங்கா
2. மேலப்புலியூர் பூங்கா
3. கீழப்புலியூர் பூங்கா
4. TNHB காலணி பூங்கா

மேலப்புலியூர் பூங்கா மற்றும் TNHB காலணி பூங்கா இரண்டும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு துறை பூங்கா மேம்பாட்டு திட்டம் –2014-15ன் கீழ் பராமரிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்து.

**23. ஆரம்பக் கல்வி**

இந்நகராட்சி பராமரிப்பின் கீழ் ஒரு நடுநிலைப்பள்ளியும், மூன்று துவக்கப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஆசிரியர்கள் 01.04.1990 முதல் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகின்றார்கள்.

**24. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இந்நகராட்சியில் 15.09.1982 முதல் சத்துணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நகராட்சி பாடசாலை சத்துணவு கூடங்கள் 4ம் அரசு மான்யத்தில் செயல்படுத்தப்படுகிறது. ஏப்ரல் 2008 முதல் வாரத்திற்கு ஒரு குழந்தைகளுக்கு ஐந்து முட்டைகள் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வாரம் ஒரு நாள் உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

**25. மருத்துவ நிலையங்கள்**

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்ட அரசினர் மருத்துவமனை இந்நகரத்தில் செயல்பட்டு வருகிறது. **14** தனியார் மருத்துவமனைகளும் உள்ளன.

**26. நகர்நல மையம்**

அரசாணை (நிலை) 130 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் துறை மூலம் நகராட்சி கட்டுப்பாட்டிலிருந்த நகர்நல மையத்தினை பொதுசுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதால் மேற்படி நகர்நலமையம் பொதுசுகாதாரத் துறையின் கீழ் ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2015 – 16ம் ஆண்டின் கீழ் ரூ10.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**27. மகப்பேறு குழந்தை பராமரிப்பு நிலையம்**

இந்நகராட்சியில் இரண்டு மகப்பேறு நிலையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. அறிக்கை ஆண்டில் ஒரு மகப்பேறு உதவியாளரும் ஒரு ஆயாவும் பணியாற்றி வருகின்றனர். இது தவிர இவர்கள் குடும்ப நலத்திட்டத்திற்கும் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர். தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி பணிகள் செவ்வனே செய்யப்பட்டு வருகிறது.

**248 குடும்ப நலம்**

2015–16ம் ஆண்டில் இந்நகராட்சிக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

**29. பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் ஒரு துப்புரவு அலுவலரும், நான்கு துப்புரவு ஆய்வாளர்களும் 87 துப்புரவு பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். 55 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. எனவே மேற்படி நகரில் 10 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி நடைபெற்று வருகிறது.

| | |
|---|---|
| 1. லாரி ஓட்டுநர்கள் | 3 |
| 2. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 5 |
| 3. துப்புரவு தொழிலாளர்கள் | 77 |

**30. தொற்றுநோய்**

அறிக்கை ஆண்டில் தொற்றுநோய் எதுவும் ஏற்படவில்லை

**31. கொசு ஒழிப்புத் திட்டம்**

இந்நகராட்சிப் பகுதியில் அரசினால் அனுமதிக்கப்பட்ட கொசு ஒழிப்புத் திட்டம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பிரிவின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் விபரம்.

| | |
|---|---|
| 1. களப்பணியாளர் | 1 |
| 2. மஸ்தூார் | 1 |

இத்திட்டத்தை சுகாதார ஆய்வாளர்கள் மேற்பார்வையிட்டு வருகிறார்கள்.

**32. பிறப்பு மற்றும் இறப்பு**

இந்நகராட்சிப் பகுதியில் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பணியினை நான்கு துப்புரவு ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அறிக்கை ஆண்டில் **5068** பிறப்புகளும் **676** இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை **18** ஆகும். அறிக்கை ஆண்டில் பிறப்பு விகிதம் **38.99** ஆகும். இறப்பு விகிதம் **8.39** ஆகும்.

**33. போலியோ ஒழிப்புத் திட்டம்**

கீழ்க்கண்டவாறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

| நாள் | பயனடைந்தோர் |
|---|---|
| 17–01–2016 | 7381 |
| 22–01–2016 | 7383 |

**34. பள்ளி சிறுவர் நலத்திட்டம்**

மேற்கண்ட திட்டத்தில் 17672 பள்ளிச் சிறுவர்கள் பயனடைந்துள்ளனர்.

**35. இரும்புச் சத்து மாத்திரை வழங்கப்பட்டவர்கள்**

ஏதும் இல்லை.

**36. வைட்டமின் ஏ**

2015–16ம் ஆண்டில் 6010 குழந்தைகளுக்கு வைட்டமின் A Solution வழங்கப்பட்டுட்டது.

**37. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்**

நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகள், வர்த்தக நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக மட்கும் கழிவுகள் தனியாகவும், மட்காத மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகள் தனியாகவும் பிரிக்கப்பட்டு நகராட்சி கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு , மட்கும் கழிவுகளை கொண்டு கலவை உரம் தயார் செய்யப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை முழுமையான அளவில் செயல்படுத்திடவும், கலவை உர விற்பனையினை அதிகப்படுத்திடவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**38. கலவை உர அபிவிருத்தி**

இந்நகராட்சியில் அம்பாசமுத்திரம் சாலையில் கலவை உரக்கிடங்கு அம்பை ரோடு மத்தளம்பாறை கிராமத்தில் 3.03 ஏக்கர் மற்றும் கடையநல்லூர் வட்டம், போகநல்லூர் கிராமத்தில் 8.25 ஏக்கர் மொத்தம் 11.28 ஏக்கர் பரப்பளவில் நகராட்சிக்குச் சொந்தமான கலவை உரம் தயாரிக்கும் இடம் உள்ளது.

**39. குடிநீர் விநியோகம்**

இந்நகரில் 1961ம் ஆண்டு முதல் குற்றாலம் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் ஏற்கனவே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5.65 + 3.65 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 17 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 1999ம் ஆண்டில் குடிநீர் அபிவிருத்திக்காக தென்காசி குடிநீர் திட்டம் ரூ.1038.17 லட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பணிகள் முடிக்கப்பட்டு 01.01.2005 முதல் நகராட்சியால் இத்திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையம் இந்நகரிலிருந்து 35 கிலோ மீட்டர் துாரத்தில் அமைந்துள்ள தாமிரபரணி ஆற்றுப் படுகையின் அருகில் ஊர்க்காடு என்ற கிராமத்தில் உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 47 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

5 இடங்களில் பம்ப்செட்களும், 2 மேல்நிலைத் தொட்டிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்நகராட்சிப் பகுதியில் 182 பொதுக் குடிநீர் குழாய்களும், 290 ஆழ் குழாய் கிணறுகளும் உள்ளன. திறந்த வெளிக்கிணறு 38 ஆகும். சிறுமின்விசை பம்புகள் 115 எண்ணங்கள் உள்ளன.

இந்நகராட்சியில் 10576 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. சராசரியாக நாளொன்றுக்கு 95 LPCDம், கோடை காலங்களில் 85 LPCDம், வழங்கப்பட்டு வருகிறது

## 40. மீட்டர் முறையில் உள்ள வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள்

வீட்டு உபயோகத்திற்காக உபயோகிக்கப்படும் குடிதண்ணீர் ஒவ்வொரு 1000 லிட்டருக்கு ரூ. 6.50 வீதமும் வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு குடிதண்ணீருக்கு ரூ. 15.50 வீதமும், கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வீட்டு உபயோகத்திற்கு உள்ள இணைப்புகளுக்கு குறைந்த கட்டணம் மாதம் 1–க்கு ரூ. 65/– வீதமும் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. வீட்டு உபயோகத்திற்கு 11743 இணைப்புகளும், வீடு அல்லாத உபயோகத்திற்கு 197 இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

## 41. பலன் தரத் தக்க வருவாய்கள்

இந்நகராட்சியிலிருந்து ஒரு வாரச்சந்தையும், ஒரு தினசரி சந்தையும் செயல்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் மேற்படி இனங்கள் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ.6,56,961 ஆகும்.

## 42. பேரூந்து நிலையம்

இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேரூந்து நிலையம் இயங்கி வருகிறது. பேரூந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேரூந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 12/– வீதம் கட்டணம் குத்தகைதாரர் மூலம் வசூலிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பேரூந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேரூந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (குத்தகை) | ரூ. 8,13,000 |
| 2. | பேரூந்து நிலைய கடைகள் கட்டணங்கள் வசூல் | ரூ. 36,87,000 |
| | மொத்தம் | ரூ. 45,00,000 |

**43. கட்டணக் கழிப்பிடம்**

இந்நகராட்சி புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்திலும், மாடுகள் பராமரிக்கும் கட்டிடத்தின் அருகிலும் தலைமை அஞ்சல் அலுவலகம் பின்புறமும் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு குத்தகைதாரர் மூலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குளிப்பதற்கு கட்டணம் நபர் 1– க்கு ரூ. 1.00 வீதமும் கழிப்பறைக்கு கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 0.50 பைசா வீதமும் நிர்ணயம் செய்து வசூல் செய்யயப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் இந்த இனத்தின் மூலம் மொத்த வருமானம் ரூ.14,86,500 ஆகும்.

**44. சாலை ஓரக் குத்தகை**

இந்நகராட்சிப் பகுதி சாலை ஓரங்களில் வைத்து வியாபாரம் செய்யும் சிறிய தற்காலிக கடைகளிலிருந்தும் தெருக்களில் தலைச்சுமையாகவும், சைக்கிளிலும் மற்றும் வண்டிகளிலும் வைத்து வியாபாரம் செய்பவர்களிடமிருந்து கட்டணமாக ரூ.3,40,200 அறிக்கை ஆண்டில் வரப்பெற்றது.

**45. பலன் தரும் மரங்கள்**

நகராட்சி எல்கையிலுள்ள மரங்களில் பலன் தரும் மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் வகையில் வரப்பெற்ற வருமானம் ரூ.36,300

**46. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்**

அறிக்கை ஆண்டில் உரிமையாணைகள் வழங்கப்பட்டதன் பேரில் நகராட்சிக்கு அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமக் கட்டணங்கள்மூலம் வருமானம் வரப்பெற்றுள்ளது.

**47. கல்வி வரி**

சொத்துவரி விதிப்புடன் 2.5 சதவீதம் கல்விவரி விதிக்கப்படுகிறது. காலி மனைவரி சதுர அடியின் அடிப்படையில் காலிமனைவரி விதிக்கப்படுகிறது.

**48. நகர அமைப்புத் திட்டங்கள்**

நகர அமைப்புத் திட்டம் தொடர்பான பணிகள் செய்வதற்கு ஒரு நகர அமைப்பு ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறார்.

**49. நகர் அளவு**

இந்நகர் பகுதி சர்வே செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு ஒரு நகர அளவர் மற்றும் இரண்டு சங்கிலி ஆள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

**50 ஆக்கிரமிப்பு**

இந்நகராட்சி தெருக்கள் முறைப்படி அளவு செய்யப்பட்டுள்ளது.

**51. (அ) முழுமைத் திட்டம்**

நகரின் எதிர் கால வளர்ச்சியைக் கருதி முழுமைத் திட்டம் அரசு உத்திரவு எண் 815 நாள் 24.7.1984ல் இணக்கம் பெறப்பட்டு அரசு உத்திரவு எண் 9 நாள் 9.1.92ல் அரசு முழுமைத் திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு அரசிதழில் 5.2.1992ம் தேதியில் பிரசுரிக்கப்பட்டது.

மேற்படி தென்காசி முழுமைத் திட்டம் தற்கால வளர்ச்சியின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட்டு, அரசாணை எண் 169 வீ.வ.ந.வ.துறை நாள் 13.7.06ல் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**52. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1**

தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1 நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33ன் கீழ் மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் இணக்கம் பெறப்பட்டுள்ளது. ஷை விரிவு அபிவிருத்தி திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் பெற நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**53. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 2**

தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 2 நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33ன் கீழ் மறு ஆய்வு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் இணக்கம் பெறப்பட்டுள்ளது. ஷை விரிவு அபிவிருத்தி திட்டத்திற்கு ஒட்டுமொத்த திட்டமாறுதல் நகராட்சிகள் சட்டம் பிரிவு 33(2)ன் கீழ் நகர்ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.8015/06/டிபி3 நாள்.02.11.09ன்படி பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒப்புதல் பெற நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**54. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 3**

ஷை விரிவு அபிவிருத்தி திட்டங்களுக்கு வரைபடம் எண் 2 ஒப்புதல் பெறப்பட்டு, நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் பெறப்பட்டு, படிவம் எண் 10ல் தொகுக்கப்பட்டு, ஷை விரிவு அபிவிருத்தி திட்டங்கள் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இணக்கம் பெற உத்தேசங்கள் சமர்ப்பிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 8213/2005 டிபி3 நாள் 9,1,2009–ல் நகர் ஊரமைப்பு சட்டம் 25–ன் கீழ் இணைக்கம் பெறப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 27(1)–ன் கீழ் படிவம் 9–னை பிரசுரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 29. கீழ் இறுதி ஒப்புதல் வேண்டி நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் ந.க.எண்.2382/09/திலிம3 நாள். 07.05.10ல் கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**55. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 4**

ஷை விரிவு அபிவிருத்தி திட்டங்களுக்கு வரைபடம் எண் 2 ஒப்புதல் பெறப்பட்டு, நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் பெறப்பட்டு, படிவம் எண் 10ல் தொகுக்கப்பட்டு, ஷை விரிவு அபிவிருத்தி திட்டங்கள் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இணக்கம் ந.க.எண்.31610/04/டிபி3 நாள்.17.05.2010ம் தேதிய செயல்முறை உத்திரவின்படி பெறப்பட்டு படிவம் 9 பிரசுரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**56. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 5**

நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 25–ன் கீழ் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்ம் வேண்டி வரைபடம் எண் 2–ன் ஒப்புதல் பெறப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் பெறப்பட்டு படிவம் எண் 10–ல் தொகுக்கப்பட்டு மேற்படி விரிவு அபிவிருத்தி திட்டம் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் இணக்கம் பெற உத்தேசங்கள் 23,02,2009–ம் தேதியில் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு உத்தேசங்கள் அனுப்பப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 14.07.2009ம் தேதிய செயல்முறை உத்திரவு ந.க.எண்.31612/04/டிபி3ன்படி படிவம் 9 பிரசுரம் செயப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**57. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 6**

மேற்படி திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 31611/2004/ டிபி3 நாள் 9,4,2008–ல் இணக்கம் பெறப்பட்டு, 1971–ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 27(1)–ன் கீழ் பிரசுரம் செய்ய நடவடிக்கைகள் மேற்க் கொள்ளப்பட்டு மேற்படி விபரம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் ந.க.எண் 9450/2004/எப்1 நாள் 10,2,2009–ல் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**58. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 7**

மேற்படி விரிவு அபிவிருத்தி திட்டத்திற்கு வரைபடம் எண் 2 ஒப்புதல் பெறப்பட்ட நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு படிவம் எண் 10–ல் தொகுக்கப்பட்டு ஷை விரிவு அபிவிருத்தி திட்டத்தினை நகர் ஊரமைப்பு ஆணைய்ா சென்னை அவர்களின் இணக்கம் வேண்டி உத்தேசங்கள் தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 901/2005/எப்1 நாள் 14,11,2008–ல் அனுப்பப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 20.05.2009ம் தேதிய செயல்முறை உத்திரவு ந.க.எண்.8072/05/டிபி3ன்படி படிவம் 9 பிரசுரம் செயப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**59. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 8**

மேற்படி விரிவு அபிவிருத்தி திட்டத்திற்கு வரைபடம் எண் 2–ன் ஒப்புதல் பெறப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு படிவம் எண் 10–ல் தொகுக்கப்பட்டு ஷை விரிவு அபிவிருத்தி திட்டத்தினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்கம் வேண்டி உத்தேசங்கள் தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 902/2005எப் 1 நாள் 24,12,2008–ல் அனுப்பப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 30.03.2009ம் தேதிய செயல்முறை உத்திரவு ந.க.எண்.20671/08/டிபி3ன்படி படிவம் 9 பிரசுரம் செயப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**60. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 9**

மேற்படி விரிவு அபிவிருத்தி திட்டத்திற்கு வரைபடம் எண் 2–ன் ஒப்புதல் பெறப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் 04.12,2009ம் தேதி நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு படிவம் எண் 10–ல் தொகுக்கப்பட்டு ஷை விரிவு அபிவிருத்தி திட்டத்தினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்கம் வேண்டி உத்தேசங்கள் தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 3172/2009/எப்1 நாள் 28,06,2010–ல் கடிதம் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**61. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 10**

விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 10க்கு வரைபடம் எண். 2 ஒப்புதல் பெறப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் 01.10,2010ம் தேதி நடத்தப்பட்டு ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு படிவம் எண் 10–ல் தொகுக்கப்பட்டு ஷை விரிவு அபிவிருத்தி திட்டத்தினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்கம் வேண்டி உத்தேசங்கள் தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2824/2010/எப்1 நாள் 28,10,2010–ல் கடிதம் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**62. தென்காசி விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 11**

மேற்படி திட்டத்திற்கு வரைபடம் எண்.2 ந.க.எண்.3487/2010/திலிம3 நாள். 07.01.2011ன்படி ஒப்புதல் பெறப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் 25.05.2011 நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**63. புறவழிச்சாலை**

தென்காசி நகருக்கான போக்குவரத்து மேலாண்மை திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. ஷை திட்ட அறிக்கையில் 80 அடி அகல முழுமைத் திட்ட புறவழிச்சாலையை அமைத்திட உத்தேசங்கள் தயார் செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்த மற்றும் உத்தேச சாலையினை அமைக்க ரூ. 12.00 கோடியில் மதிப்பீடு தயார் செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

**64. தொழில் வரி**

தொழில் வரி புதிய தொழில்வரி சட்டத்தின்படி விதிக்கப்பட்டுள்ளது. தொழில்வரி அறிக்கை ஆண்டில் இந்த தலைப்பின் கீழ் தொழில் வரி ரூ. இலட்சம் வசூலாகி உள்ளது.

**65. கேளிக்கை வரி**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது.

**66. சொத்து மாற்றங்கள் பேரில் வரி:**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிப்படி சொத்து மாற்றங்களின் பேரில் முத்திரைக் கட்டணவரி சார்பதிவாளரால் விதிக்கப்பட்டு நகராட்சிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**2015–2016–ம் ஆண்டில் சொத்துவரி மொத்த கேட்பு வசூல்**

| இனம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| வரி இனம் | 394.11 | 262.95 | 131.16 |
| வரியில்லா இனம் | 84.08 | 76.87 | 7.21 |
| மொத்தம் | 478.19 | 339.82 | 138.37 |

**67. மொத்த வரவு செலவு விபரம்**

**2014–2015ம் ஆண்டில் வரவு செலவு விபரம்**
மொத்த வரவு ரூ. 2470.76
மொத்த செலவு ரூ.1368.79

**68. கடன்களும் முன் பணங்களும்**

கடன்களுக்கான தவணைத் தொகை 31.03.2016 வரை நிலுவையின்றி அரசுக்கு செலுத்தப்பட்டது.

**69. வரி விதிப்பு தொகுப்பு**

மொத்த கட்டிட வரி விதிப்புகள் 27863
நடப்பு ஆண்டில் வரி செய்யப்பட்ட
புதிய வரி விதிப்புகள் 888

**70. பொதுவான விபரங்கள்**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் பொது நிர்வாகம் திறம்பட நடந்தது. இந்நகராட்சியின் நிர்வாகம் சீராகவும், செம்மையாகவும் நடைபெற எல்லா ஒத்துழைப்பையும் நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற பொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் அனைத்து பணியாளர்களும் நல்கினர்.

## 71. மின் ஆளுமை

இந்நகராட்சியில் 1997ம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சிறப்பான முறையில் நகராட்சிகளில் கணினிமயமாக்கல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது இந்நகராட்சியில் 24 கணினிகள் , 11 லேசர் பிரிண்டர் மற்றும் 4 டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டருடன் பொதுமக்களுக்கு சிறப்பான சேவை செய்யப்பட்டு வருகிறது.

1) சொத்துவரி, தண்ணீர்கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் பொதுமக்களுக்கு கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது.
2) பிறப்பு இறப்பு சான்று கணினி மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது
3) இந்நகராட்சியில் இயல்புநிலை கணக்குகள் கணினிமயமாக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் பிறப்பு, இறப்பு பதிவுகள் சென்னை NIC Serverல் பதியப்பட்டு உலகமெங்கும் உள்ள இணைய தளத்தில் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தகவல்கள் தவறாது இந்நகாட்சியில் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு பொதுமக்கள் இணையதளம் மூலம் தகவல் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் பதில் இணையதளம் மூலமே அனுப்பப்படுகிறது.

இந்நகராட்சியில் ரூ. ஒரு இலட்சம் மதிப்பீட்டிற்கு மேலாக மேற்கொள்ளப்படும் பணிகளின் ஒப்பந்த புள்ளிகள் இணைய தளம் மூலம் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆணையாளர்,
தென்காசி நகராட்சி.

# தென்காசி நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2015–16